www.padippakam.com


# பொதுமை

மலர். 2 இதழ். 7

அன்பளிப்பு ரூபாய் 2

20-7-85

வெளியீடு:

ஈழப்புரட்சி அமைப்பு

EROS

ஈழத்தில் 15-06-85 வெளியான இவ்விதழ் கடல் கடந்து வாழும் தோழர்களுக்காக, சென்னையில் மறுபதிப்புச் செய்யப்பட்டு 20-7-85 அன்று வெளியிடப்பட்டது.


## இலங்கையைச் சாட்டாக வைத்து இந்து சமுத்திர பிராந்தியத்தில் யுத்த மேகங்கள் சூழ ஆரம்பித்துள்ளன

**சோவியத் யூனியனில் ராஜீவ் பேச்சு**

## வடபகுதி தீவிரவாதிகளை வன்முறைகளை கைவிடும்படி இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும், இல்லையேல் இந்தியாவுடன் பேசுவதில் பயனில்லை

**பாதுகாப்பு அமைச்சு அபிப்பிராயம்**

## இந்தியாவின் துணையுடன் பிரச்சினையைத் தீருங்கள்

**அனுராதபுரத் தாக்குதலுக்குப்பின் பிக்குகள் வேண்டுகோள்**

## இலங்கைப் பிரச்சினை இந்தியாவின் தேசியப் பிரச்சினை

**குர்ஷித் ஆலம்கான் பாராளுமன்ற உரை**

# போர் நிறுத்தம் நீடிக்குமா?

சில மாதங்களுக்கு முன் இலங்கை - இந்திய உறவுகள் இடைவெளி கண்டிருந்ததும், இலங்கை அரசு இந்தியாவுடனான பேச்சு வார்த்தைகளை அலட்சியப்படுத்தி வந்திருந்ததும் யாவரும் அறிந்த விடயம். இவ்வாறு அலட்சியம் கொண்டிருந்த மாதங்களில் 'இயக்கங்கள் வன்முறைகளை நிறுத்தினால் தான் பேச்சுவார்த்தை' என்ற நிபந்தனை முன்மொழியப்பட்டிருந்தது.

ஆயினும் அனுராதபுரத்தாக்குதல்களை அடுத்து சிங்களவர் மத்தியில் ஏற்பட்ட குமுறலும், பீதியும் ஜே ஆரை திடீரென ராஜீவைத் தேடி ஓடவைத்தது. இவரது டெல்லி சந்திப்பிலும் ஜே ஆரினால் 'முதலில் வன்முறைகள் ஓயவேண்டும்'என்ற முன் நிபந்தனையே மீண்டும் விடாப்பிடியாக முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கு இந்தியா இப்போது இணங்கியிருப்பது ஜே ஆரின் பேச்சுகளிலும், இந்தியாவின் நடவடிக்கைகளிலும் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளன.

இரு தரப்பினரும் வேண்டுகோள்களாயும், வற்புறுத்தலாயும் விடுக்கும் 'போர்நிறுத்தம்' இருசாராருக்கும் ஏன் அவசரமாகத் தேவைப்படுகிறதென்பதை நாம் அவதானமாக கணிப்பீடு செய்ய வேண்டும். இந்த தேவையே பேச்சு வார்த்தையின் பலாப்பலன்களை தீர்மானிக்கும் முக்கிய காரணி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

### இந்தியாவின் தேவை

இலங்கையைச் சாட்டாக வைத்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் யுத்த மேகங்கள் சூழ ஆரம்பித்துள்ளன என பிரதமர் ராஜீவ் தனது சோவியத் விஜயத்தின்போது பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்திருந்தார். இதன் விரிவான அர்த்தம். அமெரிக்கா ஜயவர்த்தனவை கைப்பொம்மையாக்கி இந்து சமுத்திரத்து ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொள்வதும் இதனூடாக இந்தியாவிற்கு அச்சுறுத்தல் விடுப்பதுமாக அமைகிறது.

இந்த ஆதிக்கத்தையும் அச்சுறுத்தலையும் எதிர் கொள்ளத்தக்க வகையிலேயே இலங்கை இனப்பிரச்சனையை இந்தியா தீர்க்க முனையுமென்பதில் நாம் தெளிவாக இருத்தல் வேண்டும். ஆகையால் இலங்கை அரசு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை தீர்க்க முன் வைக்கும் தீர்வானது, அமெரிக்க ஊடுறுவலை முறியடிக்கக் கூடியதாயிருந்தால் மாத்திரமே அது இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதாயிருக்கும்.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை கடந்த மார்கழி மாத சம்பவம் எமக்கு உறுதிப்படுத்த உதவுகிறது. கடந்த வருடங்களில் இனப்பிரச்சினையைத் தீர்க்க, இந்தியா ஆலோசனையாக கூறிவந்த 'மாநில சுயாட்சித் தீர்வை' ஓரளவு நிறைவேற்றக் கூடிய வகையில், கடந்த மார்கழியில் ஜே. ஆர் 'சபைத்' தீர்மானங்களாக வெளிப் படுத்தியிருந்தார். ஆனல் இத்தீர்வு அமெரிக்க ஊடுறுவலைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் அற்றிருப்பதை உணர்ந்த, இந்தியா இதை நிராகரித்திருந்தது.

இந்த நிராகரிப்புடன் இந்தியாவினதும் அதற்கு சாதகமாகச் செயற்படும் கூட்டணியினதும் தொடர்பை துண்டித்துக் கொள்ள இலங்கை அரசு தயாரானது. இனிமேல் இந்தியாவுடனோ கூட்டணியுடனோ பேசத் தயாரில்லை என்றூர், ஜயவர்த்தன. இதனல் இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியாவின் பேச்சு வார்த்தை பிடிதளர ஆரம்பித்தது.

இதற்கு மீண்டும் புத்துயிரளிக்க மன்னரிலிருந்து சென்ற அகதிகளின் பிரச்சினையை பயன்படுத்த இந்தியா முற்பட்டபோது, ஜே. ஆர் பாக்கிஸ்தானில் நின்றபடி 'தமிழ் மக்களின் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை' எனவும் 'அதை நாமே தீர்த்துக் கொள்ளமுடியும்' எனவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜே. ஆரின் இக்கருத்தை மறுதலிக்கும் வண்ணம் இந்திய பாராளுமன்றத்தில், குர்ஷித் ஆலம் கான் இனப்பிரச்சனை தீர இந்தியா முன் வைத்த நிபந்தனையையும் இங்கு நாம் மனங்கொள்ளல் வேண்டும். தனது உரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியாவின் தேசியப் பிரச்சினை எனக் குறிப்பிட்ட குர்ஷித் ஆலம் கான், இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண, வடக்கு, கிழக்கு பகுதியிலிருந்து இராணுவம் வாபஸ் வாங்க வேண்டுமெனவும், சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டுமெனவும், சிறையிலடைக்கப்பட்ட இளைஞர்கள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுவித்திருந்தார்.

இந்தியா இப்பிரச்சனையை தனது தேசிய பிரச்சினையாக சித்தரித்திருப்பதையும், அதற்காக இலங்கை அரசிற்கு விடுத்துள்ள வேண்டுகோளையும் கருத்திலெடுத்துப் பார்க்கும்போது இந்தியாவின் நிலைப்பாடு புதிய ஒரு கட்டத்திற்கு மாறியிருப்பதை உணர்ந்து கொள்ளலாம். ▶

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்

படிப்பகம்

www.padippakam.com

# ஈழவிடுதலை இயக்கத்திற்கு அங்கீகாரம் மட்டும் தருக

# போராட்டத்தை நாங்கள் நடத்துகிறோம்

முன்னர் இத்தகைய வேண்டுகோள்கள் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாய் விளங்கி வந்த கூட்டணியினராலேயே முன்வைக்கப்பட்டு வந்திருந்தன. இது மாறி இப்போது இந்தியாவால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் 'தாக்குவதற்கு இயக்கங்கள் பேசுவதற்கு அமிர்தலிங்கம்' என்றிருந்த காலம் மாறிப்போய் 'தாக்குவதற்கு - இயக்கங்கள் பேசுவதற்கு ராஜீவ்' என்ற நிலைக்கு வந்திருக்கிறது.

இந்தப் புதிய சூழ்நிலையினுலேயே அநுராதபுரப் படுகொலைகள் கொடுத்த நெருக்கடிகளினுல் 'அரசியல் தீர்வு' தேடி, ஜே. ஆர் ராஜீவை சந்திக்கும் நிலை வந்திருக்கிறது. இப்போது ஏற்பட்டுள்ள, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து இலங்கையில் அரசியல் கண்காணிப்பை செய்வதற்கு இந்தியா தயாராகிவிட்டது. இதற்காக பேச்சுவார்த்தையை எப்படியும் ஆரம்பிப்பதற்காக இலங்கை இட்ட நிபந்தனையை இந்தியா ஏற்று நடக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆட்பட்டு நிற்கிறது.

## இலங்கையும் அதன் தேவையும்

'ஈழம் கேட்பவர்களை முறியடிக்க நாம் இரண்டு திட்டங்களை வைத்திருக்கிறேம். வவுனியாவிலிருந்து ஆனையிறவுவரை சிங்களவர்களை குடியேற்றுவது ஒன்று; மற்றையது கடல் எல்லையை பலப்படுத்துவது. இதற்கு நாம் இப்போது பரீட்சார்த்தமாக பாவித்துவரும் ஒரு ரோந்துக் கப்பல் நல்ல பலனைத் தந்துள்ளது. இது போன்ற மேலும் பலவற்றை நாம் கொள்வனவு செய்யவுள்ளோம். கடல் எல்லையைப் பலப்படுத்துவதானது வன்முறையில் 80 வீதத்தை ஒழித்துக் கட்டியதற்குச் சமம், இவ்வாறு அத்துலத் முதலி கருத்து வெளியிட்டிருப்பதானது தமிழ் பேசும் மக்களின் வேட்கையை எந்த வகையில் தீர்த்துக் கட்டத் துணிந்து வருகிறுர்கள் என்பதை தெளிவு படுத்துகிறது. ஜயவர்த்தனவின் போக்கைப் பொறுத்த வரையில், இராணுவத்தீர்வை, செயலளவிலும் அரசியல் தீர்வைப் பேச்சளவிலும் முன்வைத்திருப்பதைக் காணலாம். இவற்றில் சிங்களக் குடியேற்றம் என்பதைப் படிப்படியாகவும், கடல் எல்லைக் கட்டுப்பாட்டை புரட்டாசி மாதத்திற்குள்ளும் நிறைவேற்றத் திட்டமிட்டிருக்கிறது. இதற்காக இஸ்ரேலிடமிருந்து ஆறு நவீன ரோந்துக்கப்பல்களையும் பாக்கிஸ்தான், சீன பிரித்தானியாவிடமிருந்து நவீன ஆயுதங்களையும் பெற்றிருக்கிறது. இவற்றை இன அழிப்பிற்கு உபயோகப்படுத்தச் செய்யவேண்டிய தயாரிப்பு வேலைகளுக்கு சிலமாத அமைதி நிலை இலங்கை அரசுக்குத் தேவைப்படுகிறது. இதுமட்டுமல்லாமல் அநுராதபுர நெருக்கடிகளால் சிங்கள மக்கள் மட்டத்தில் கிளம்பியுள்ள பய உணர்வைத் தணிப்பதற்கு 'சில காலம் தீவிரவாதிகள் தாக்கமாட்டர்கள், எனக் கூறி, சாந்தப்படுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்கிறது. இந்த இருவகை தேவைகளுக்காகவே இலங்கை 'போர்நிறுத்தம்', 'பேச்சுவார்த்தை' என வேடம் பூண்டுள்ளது.

## போராளிகளின் இன்றைய நிலைப்பாடு

இந்தியா 'பேச்சுவார்த்தையை தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும் இயக்கங்கள் போர்நிறுத்தம் செய்ய வேண்டுமென' நிர்ப்பந்தம் செய்வதை ஈழப்போராளிகள் ஒரு ஏகோபித்த முடிவின் அடிப்படையிலேயே தீர்மானிக்க வேண்டும்.

பேச்சுவார்த்தையென்பது எந்த விதத்திலும் தீர்வைத் தந்து விடாதென்பதில் இயக்கங்கள் உறுதியாக இருக்கும் அதே வேளையில், அரசியல் தலைமையை இயக்கங்கள் எய்துவதற்கு இதை ஓர் வாகனமாகப் பயன்படுத்தலாமா என்பதிலேயே இயக்கங்கள் ஏகோபித்த முடிவினை எய்த வேண்டியுள்ளது. இதனடிப்படையிலேயே போர்நிறுத்தம் செய்வதும் செய்யாது விடுவதும் தீர்மானிக்க வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் இயக்கங்கள் ஒருமித்த தீர்மானத்துக்கு வரத்தவறினுல் இரு முகாம்களாகப் பிளவுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஏறக்குறைய 60 ஆயிரம் அகதிகள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்நிலையில் இலங்கைத்தமிழர் பிரச்சினை வெறும் உள்நாட்டுப் பிரச்சினையாக இருக்கமுடியாது. எனவே, இலங்கைத்தமிழர் பிரச்சினை குறித்து ஆலோசனை கூற பாரதப் பிரதமர் ராஜீவ் 'ஆலோசனைக்குழு' ஒன்றை அமைத்துள்ளார். ஈழவிடுதலைப் போராளிகள் எத்தகைய கருத்தைக் கொண்டிருக்கிறுர்கள் என்பதை இந்த ஆலோசனைக் குழு கேட்டறிந்து கொள்வது பிரச்சினையின் தன்மையை புரிந்து கொள்ள உதவும் ஆகையால், போராடும் பிரதான இயக்கங்களில் ஒன்றுன ஈழப்புரட்சி அமைப்பை (EROS) ச் சேர்ந்த தோழர் பாலகுமாரனைப் பேட்டி கண்டு, தமிழ் பேசும் போராளிகளின் விடுதலை உணர்வை வெளியிட்டதாக குறிப்பிட்டு "தினசரி" (பேட்டி கண்டவர் பாஸ்கர சத்திய சிங்) நாளிதழில் வெளிவந்த கட்டுரையினை தொகுத்து இங்கு மறு பிரசுரம் செய்கிறேம்.

இலங்கை அரசின் வருமானத்தில் பாதிக்கு மேலானதை ஈட்டிக் கொடுப்பவர்கள் மலையக மக்கள் தான். ஆனுல் 1947இல் சுதந்திரமடைந்த அடுத்த ஆண்டிலேயே இலங்கையின் முதுகெலும்பான மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையும், வாக்குரிமைகளையும் திட்டமிட்டு இலங்கை அரசு பறித்துவிட்டது. இந்த வகையில் இலங்கை அரசானது தமிழ் பேசும் மக்களுக்கெதிரான சட்டத்தை அமுல்படுத்தி இந்த மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்களை இருபதாம் நூற்றுண்டின் நவீன அடிமைகளாக கொடூரமான முறையில் ஒடுக்கத் தொடங்கியது. இதுவே தமிழ் பேசும் மக்களுக்கெதிராக வைக்கப்பட்ட முதலாவதான ஒடுக்குமுறையாகும்.

இந்த மலையகம் வாழ் தமிழ் பேசும் தொழிலாளர்களின் சக்தியானது எதிர்காலத்தில் ஒருமுகமாகத் திரட்டப்பட்டு வெளிப்பட்டால் எந்தவிதமான அணுகுமுறைகளினுலும் இலங்கை அரசால் கட்டுப்படுத்தப்பட முடியாது. இதனை உணர்ந்ததாலேயே இலங்கை அரசு திட்டமிட்டு இம்மக்களின் அனைத்து உரிமைகளையும் முதலிலேயே பறித்துவிட்டது. ஆனுல் அக்காலகட்டத்தில் இருந்த அரசியல் பிரமுகர்கள் இதனை எதிர்க்க முன்வரவில்லை. அப்போது தொலை நோக்கு அரசியல் பார்வையுடன், தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரமுகர்கள் என தங்களைக் கூறிக்கொண்டிருந்தவர்கள், தட்டிக் கேட்டிருந்தால் தற்போதுள்ளவாறு இலங்கையில் பிரச்சினை வலுவடைந்திருக்காது என்பது கசப்பான உண்மையாகும்.

இதை ஒரு நேரத்தில் தட்டிக் கேட்டவர் செல்வநாயகம் அவர்களே. இவர் தமிழரசுக் கட்சியின் தந்தையென அன்பாக அழைக்கப்பட்டவர். இப்பிரச்சினை தொடர்பான ஆழமான கண்ணேட்டம் இல்லாத காரணத்தால் தட்டிக் கேட்டுப் போராட்டம் நடாத்த முனைந்தும் தீர்வு காண முடியவில்லை. ஒடுக்குமுறையாளர்கள் இம்மக்கள் தொடர்பாக 1964இல் சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தி மலையகமக்களில் பாதிப் பேரை இலங்கையில் விட்டுவிட்டு மறுபாதியினரை இந்தியாவுக்கு ஆடுமாடுகளை விரட்டி அடிப்பதுபோல நாடு கடத்தினர்.

*இலங்கை அரசானது இப்படியான கொடூரமான செயலை-தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையினை - முதல் கட்டமாக நடை முறைப் படுத்தியது மிகவும் பின்தங்கிய மலையகம் வாழ் தமிழ்பேசும் மக்களிடமே தான்.

* இதன்பின் அடுத்தக்கட்ட ஒடுக்குமுறையாக தமிழ் பேசும் மக்களின் கல்வி - வேலைவாய்ப்பு உரிமைகளைப் பறிப்பதன் மூலம் கையாண்டது; இந்த இரண்டாவது கட்ட ஒடுக்குமுறையானது தமிழ் பேசும் மக்களில் மத்தியதர வகுப்பினருக்குப் பெருத்த தாக்கத்தைக் கொடுத்தது.

* மூன்ருவது கட்ட ஒடுக்கு முறையாக கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களது நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து அவ்விடங்களில் வாழ்ந்த எம்மக்களை விரட்டிவிட்டு சிங்களவர்களை குடியேற்றி சொந்த மண்ணிலேயே எம்மக்களை அகதிகளாக்கி ஒடுக்கியது. இவ்விதமான செயற்பாடுகளில் இலங்கை அரசானது தமிழ்ப் பேசும் மக்களிடையே இஸ்லாமிய-இஸ்லாமியரல்லாதோர் என்ற வேறுபாடில்லாதவாறே தனது கைவரிசையைக் காட்டியது. இப்படியாக, 1948இல் இருந்து தமிழ் பேசும் மக்களை திட்டவட்டமாக வேரோடு அழிக்கும் முயற்சிகளில் வேகத்துடன் செயல்பட்டு வருகிறது சிங்கள அரசு. இந்த ஒடுக்குமுறைகள் கூர்மையடைந்துள்ள இக்காலக் கட்டத்தில் இலங்கையில் சேர்ந்து வாழுதல் என்பது முடியாத காரியமாகும். அழிந்து கொண்டிருக்கும் எம்மக்களுக்காக தனிநாட்டை நாம் அமைத்தே ஆக வேண்டியவர்களாகவுள்ளோம்.

பாராளுமன்ற அர்சியல் மூலமாகவோ, பேச்சுவார்த்தை மூலமாகவோ தீர்வு கிடைக்கலாம் என்று கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட 'பேச்சுவார்த்தை - ஒப்பந்தம்' முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்துள்ளன. எமது வரலாற்றிலே தமிழ்பேசும் மக்கள் மேலும் அழிவதற்காக இராணுவ அட்டூழியங்களை அதிகப்படுத்தி வரும் அனுபவத்தையே நாம் கண்டு கொண்டிருக்கிறேப். எனவே, எமது மக்கள் தற்போதுள்ள இந்நிலையில் தமது உடமைப்பாட்டிற்காகப் போராடுவதைத்தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது. எம் மக்கள் மீது ஒடுக்குமுறையின் உச்சக் கட்டமாக நடத்தப்படும் இராணுவ செயற்பாடுகளாலும் கலவரங்களாலும் புரட்சிகர ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலமே ஈழத்தை வென்றடையலாம் என்ற உணர்வை திட்டவட்டமாக்கியுள்ளது. இதனுல் எங்களை பயங்கரவாதிகளென்றே தீவிரவாதிகளென்றே கூறுவது பொருத்தமாகாது.

மனிதாபிமானமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்த நாங்கள், எதிர்காலத்தில் சுபீட்சமாக வாழ்வதையே விரும்புகிறேம். ஆனுல் எங்களை அப்படி வாழவிட ஸ்ரீலங்காவின் மத-இன வெறி பிடித்த அரசு தயாராக இல்லை. எனவே போராட்டம் மூலம்தான் 40 லட்சம் ஈழத்தமிழ் பேசும் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. அதாவது எமது போராட்டம் நியாய பூர்வமான்து- மனிதாபிமானமானது- எந்த வகையிலும் தவருகக் கருதமுடியாதது. எங்களுக்குள் வேறுபாட்டை ஏற்படுத்தவோ, எங்கள் மண்ணை எங்களிடம் இருந்து பறிக்கவோ ஸ்ரீலங்கா அரசிற்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஆண்டாண்டு காலமாக உரிமைகள் பறிக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டு அடிமைகளிலும் கேவலமாக தமிழ் பேசும் மக்கள் வேட்டையாடப்படும்போது ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர வேறு வழிதான் எமக்கு உண்டா?

> ஆண்டாண்டு காலமாக உரிமைகள் பறிக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டு அடிமைகளிலும் கேவலமாக தமிழ் பேசும் மக்கள் வேட்டையாடப்படும் போது ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர வேறு வழிதான் எமக்கு உண்டா?

இலங்கையில் வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற பிரதேசங்களில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களை பிரதேச ரீதியாகவும்; இஸ்லாமியர் இஸ்லாமியர் அல்லாதோர் என மத ரீதியாகவும் வேறுபிரித்துப் பார்க்கலாம். நெருக்குவாரங்களிடையே கடுமையான ஒடுக்கு முறைக்கு முகம் கொடுத்துவரும் எம்மக்களிடையே எந்தப்பிரிவினை வேறுபாடுகளுமின்றியே போராடி வருகின்றேம். எமது இலட்சியம் சமதர்ம ஈழம் அடைய வேண்டுமென்பதே. ஆனுல் ஸ்ரீலங்கா அரசு இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைப் பெறத் திட்டமிட்டு எங்கள் போராட்டத்தில் இஸ்லாமியத் தமிழ்ப்பேசும் மக்களைப் பிரித்திட சதி செய்து வருகிறது.

எங்களுக்குள் ஒற்றுமை இல்லை- வேறுபாடுகள் காணப்படுகின்றன என்ற புகார்கள் பொதுவாகச் கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் இது உண்மையாகக் காணப்பட்டது. ஆனுல் இப்போது போராடும் மக்கள் அமைப்புகள் இணைந்து பொது எதிரியான ஸ்ரீலங்கா அரசிற்கெதிரான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேம்.

இந்த வகையிலேயே போராடும் பிரதான இயக்கங்களான TELO, EPRLF, LTTE, EROS ஆகிய நான்கு அமைப்புக்கள் இணைந்து செயல்படுகின்றன. இவ்வகையான இக் கூட்டே ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என அழைக்கப்படுகிறது. எமது மக்களது போராட்டத்தை செவ்வனே மேலெடுத்துச் செல்ல இணைந்து உருவான ENLF மூலம் சிங்கள அரசின் கொடூரமான தாக்குதலைச் சந்தித்து வருகிறேம். இத்தருணத்தில் ஈழ விடுதலை இயக்கங்களை இந்திய அரசு சட்டப் பூர்வமாக அங்கீகரித்தால் செழுமையாக எமது போராட்டத்தை மேலெடுத்துக் செல்லக் கூடியதாக இருக்கும். இதனுல் ஒருபோதும் இலங்கை அரசினது அனுவசியமான குற்றச் சாட்டுக்கு இந்தியா ஆளாக மாட்டாது. இந்த வகையில் நியாய பூர்வமான போராட்டத்தில் ஈடுபடும் ஈழத் தமிழ் பேசும் மக்களது போராட்டத்தை ஆதரித்த முதல் நாடாக இந்தியா அமையும். உலகில் வாழும் மனிதாபிமானம் கொண்ட மக்களது நல்லபிப்பிராயத்தை இந்தியா பெறும்.

> எங்களுக்குள் ஒற்றுமை இல்லை - வேறுபாடுகள் காணப்படுகின்றன - என்ற புகார்கள் பொதுவாக கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் இது உண்மையாகக்காணப்பட்டது. ஆனுல் இப்போது போராடும் மக்கள் அமைப்புகள் இணைந்து பொது எதிரியான ஸ்ரீலங்கா அரசிற்கெதிரான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேம்.

இதன் மூலம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப்போல ஐ.நா. சபையில் அங்கீகாரம் கிடைக்கும் தகுதியை நாம் அடைவோம். இதன்மூலம் சிறப்பாக எமது போராட்டம் வெற்றியை நோக்கிச் செல்லும். இதனுல் தான் நாம் வலியுறுத்துவது யாதெனில் "ஈழப் போராட்டத்திற்கு அங்கீகாரம் மட்டும் தருக; எமது போராட்டத்தை நாமே நடத்திக் கொள்கிறேம்."

எங்களைப் பொறுத்த வரையில் இலங்கையில் தனித் தேசிய இனமாகிய ஈழவர்களாகிய நாம் சிங்களர்களுடன் சேர்ந்து வாழுவதா அல்லது பிரிவதா என்று தீர்மானிக்கும் உரிமை எமக்கேயுண்டு.

உலகத்தின் பிற்போக்குச் சக்திகளிடம் இருந்து உதவிகளைப்பெற்றுகொண்டு ஈழத் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கும் முயற்சியில் சிங்கள அரசு ஈடுபடுவதைத் தடுக்கவும் - அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது மக்களை பாதுகாக்கவும் போராடும் எமக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் அவசியமானது. இந்தியாவானது இவ்வகை உதவியை எமக்கு செய்வதன் மூலம் நியாய பூர்வமான எமது மக்களது போராட்டத்திற்கு பேருதவி வழங்கியதாக வரலாற்றில் இடம் பெறும். □

www.padippakam.com





# பெண் விடுதலை



நவீன குடும்பத்தில் பெண்மீது ஆணுக்குள்ள ஆதிக்கத்தின் அலாதித் தன்மையும், அவர்களிடையே உண்மையான சமுதாயச் சமத்துவம் நிறுவுவதற்கான அவசியமும், வழிமுறையும் அவ் விருவரும் சட்டத்தின் முன் பூரணமாகச் சமநிலையில் இருக்கும்போதுதான் முழு உருவத்தில் வெளிக்காட்டப்படும். பெண்ணினம் முழுவதையும் பொதுத்தொழில் துறையில் மீண்டும் புகுத்துவதுதான் பெண்களின் விடுதலைக்குரிய முதல் நிபந்தனை என்பது அப்போதுதான் தெளிவாகும். இது சமுதாயத்தின் பொருளாதார மூலக்கூறு என்ற தன்மையைத் தனிமைப்பட்ட குடும்பம் பெற்று இருக்கிறதே, அந்தத் தன்மையை ஒழித்துத் தீர வேண்டும் என்று கோருகிறது என்பதும் தெளிவாகும்.

அண்மைக் காலங்களில் பெண் விடுதலை பற்றிய உணர்வு பூர்வமான பிரதிபலிப்புக்கள் பல ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது. ''பெண் விடுதலை'' ''தேசிய விடுதலை'' இரண்டிற்குமான 'உறவுகள்' போராட்டங்கள் என்பன பற்றிய கருத்துக்கள் உருவாக்கப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முதலில் 'தோழி' யும் அதனைத் தொடர்ந்து ''சக்தி'', ''விளக்கு'' என இதழ்கள் விரிவுபட்டு பெண் விடுதலைபற்றிய ''தாகம்'' பலரிடையே தோன்றியுள்ளது. பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடாத்தப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் சோசலிசத்தை நிர்மாணிப்பதன் வாயிலாக மட்டுமே பெண் விடுதலை என்பது பெறப்படும் என ஒரு சாராரும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இரண்டறக் கலப்பதன் மூலம் பெண் விடுதலையை உத்தரவாதப்படுத்தலாம் என ஒரு சாராரும், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தனித்தன்மையைக் கருதி எல்லா வர்க்கத்திலும், எல்லாத்தரத்திலும் உள்ள பெண்கள் என்ற வகையில் ஓரணியில் திரட்டப்படல் வேண்டும் என ஒரு சாராருமாக வெவ்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இவை பற்றிச் சிறிது நோக்கலாம்.

### பெண்ணடிமைத்தனமும் அதன் வரலாறும்

பெண்ணடிமைத்தனம் அல்லது பெண்களை அடிமையாக எண்ணும் போக்கு இன்றோ, நேற்றோ திடீரென ஏற்பட்டதொன்றல்ல. மனித குல வரலாற்றின் ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவு முறைகளினால் தாயுரிமை அல்லது தாய்வழிச் சந்ததி என்பதே வலிமை பெற்றுத் திகழ்ந்தது. காடுகளில் வேட்டையாடித் திரிந்த மனிதன் சாதுவான மிருகங்களை வளர்க்க ஆரம்பித்து, அதன் பின் விவசாயம் விருத்தியுறத் தொடங்கியதும் தனிச் சொத்துரிமை தோற்றம் பெறலாயிற்று. இவ்வாறு தனிச்சொத்து உரிமை தோற்றம் பெற்றதும் சொத்துக்களைப் பேணும் வாரிசும் அதற்காக தனக்கே உரித்தான குழந்தையும் தேவைப்பட்டது. இந்த அடிப்படையிலேயே ஆணின் ஆட்சி, தனதே எனக் கூடிய குழந்தைகளைப் பெறுவது - தனது சொத்துக்களுக்கு வாரிசு என வரக் கூடியவர்களைப் பெறுவது என்பவற்றை இலட்சியமாகக் கொண்டு ஒருதார மண முறை வரலாற்றில் தோற்றம் பெற்றது. ஆனால் இந்த ஒருதார மணமுறை அதாவது ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்னும் கோட்பாடு ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்பட்ட சமரசமான உடன்பாடாக அமையவில்லை. அப்படிப்பட்ட ஒரு சமரசத்தின் உச்சக்கட்டம் அதுவாக, அதாவது ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்பதுவாக இருந்த போதிலும் நடைமுறையில் ஆண்கள் பெண்களை அடக்கும் ஒரு முறையாகவே இது அமைந்தது. இவ்வாறன ஒரு தார மணமுறை மிகவும் பாரபட்சமாகப் பெண்களைப் பாதித்தது. பெண்களுக்கு மறுமணம் என்ற உரிமையையும், விதவைகளுக்கும் கூட மறுமணம் என்ற உரிமையையும் ரத்து செய்தது. கணவனைப் பிரிந்து வாழுதலும் கட்டாயமாகத் தடுக்கப்பட்டது. ''கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'' எனச் சிருஷ்டிக்கப்பட்ட புராணங்களுக்குள் பெண் புதைக்கப்பட்டாள். இவ்வாறகப் பார்த்தால் **தாய் உரிமை முறை பறிக்கப்பட்டதுதான் வரலாற்றில் பெண்கள் பெற்ற முதலாவது தோல்வி** எனலாம். தாயுரிமை மறுக்கப்பட்டு, ஒருதார மணமுறை ஒருதலைப்பட்சமாகக் கட்டாயமாக்கப்பட்டதையடுத்து. பெண்கள் இழி நிலைக்குத் தள்ளப்பட்டனர், பணிமகளாக்கப்பட்டனர். காம இச்சைக்கு இரையாகி குழந்தைகளைப் பெறும் சாதனங்கள் என ஆக்கப்பட்டனர். இதனால் தான் ''வரலாற்றில் தோன்றுகின்ற முதல் வர்க்க விரோதம் ஒரு தார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே வளர்வதோடு ஒன்றுபடுகிறது; முதல் வர்க்க ஒடுக்கு முறையோ பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்கு முறையோடு ஒன்றுபடுகின்றது. ஒருதார மணமுறை வரலாற்றில் மகத்தானதொரு முன்னேற்றம். ஆனால் அடிமையோடும் தனிச் சொத்துரிமையோடும் சேர்ந்த ஒரு சகாப்தத்தையே அது தொடக்கி வைத்தது'' என ஏங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்.

### பெண்களும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

எமது சமூகத்தில் பெண்கள் பல்வேறான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள் என்பது வெளிப்படை. மதச்சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற ரீதியிலும் பண்பாடு, கலாச்சாரம் என்ற வகையிலும் அடக்கப்படுகின்றார்கள். இவற்றை எதிர்நோக்க முடியாதவாறு உள்ளமைக்கு முக்கிய காரணம் பொருளாதார ரீதியாக சுயபலம் அற்றவர்களாக, பொருளாதாரத்தில் பிறரைச் சார்ந்து நிற்பவர்களாகப் பெண்கள் விளங்குவதாகும். மகள் தகப்பனிலும், மனைவி கணவனிலும், தங்கிருக்கும் சூழல்களில் தகப்பன், தமையன், கணவன் ஆகியோரது மனவிருப்பங்களை நிறைவேற்றும் கட்டாயத்துடன் அவளது தலைமீது சுமத்தப்படுகிறது. மதச் சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்தும் பெண்களைக் கட்டுப்படுத்தி அடங்கி நடத்தலே அவளுக்குரிய பண்பு என போதனை செய்கிறது. பண்பாடு, கலாச்சாரம் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு சமுதாயம் பெண்ணை அடுக்களை வாசியாக்கி அவளது சிந்தனையையும், செயற்திறனையும் மழுங்கடிக்கின்றது.

இதே வேளையில் இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருந்தும். போலிப் பெருமைகளுக்கும், வீண் ஆடம்பரங்களுக்கும் ஆட்பட்டுப் போகும் பெண்கள், தமக்குள் தாமே சிறைபட்டுப் போயுள்ளனர். அடுத்த வீட்டில் இருப்பது போல என்பதில் ஆரம்பித்து தனது சக்திக்கும் வருமானத்துக்கும் மீறிய செலவினங்களைத் தேடி போலியான பெருமைகளையும் வீணான ஆடம்பரங்களையும் பேண முயல்கின்றனர். இந்த வகையானோர் தங்கள் நடத்தைக்காக பெருமளவில் தங்கி நிற்றல் (பொருளாதாரத்தில்) அத்தியாவசியமாகிப் போய்விடுகின்றது. இப்போலிப் பெருமைகள், வீண் ஆடம்பரங்கள் என்ற சின்னச் சிறைகளை உடைத்து வெளியேறுவதன் மூலமே பெண்கள் சமுதாய மாற்றத்தில் ஈடுபட முடியும். அதாவது சிக்கன வாழ்வு, போலிப் பெருமைகளை மறுக்கும் செயற்பாடு என்பவற்றை தமதாக்கிக் கொள்ள வேண்டும்.

### போராட்டத்தில் பெண்கள்

இன்றைய எமது சமுதாயத்தில் போராட்ட நடவடிக்கைகளில் பெண்களும் ஈடுபட்டு நிற்கின்றனர் என்பது பலரும் தெரிந்த ஒன்றே. ''எனது மகன் எங்குள்ளான் என்பதை நானறியேன். அவன் உயிருடன் உலகில் இருந்தால் போர்க்களத்தில் தோன்றுவான். ஆனால் அந்தப் புலி வாழ்ந்த குகை இதுதான்'' என்று சொன்ன தமிழ்ப்பெண்ணை புறநானூற்றில் காணலாம். இதுபோல் கணவனையும் தகப்பனையும் தமையனையும் போர்க்களத்தில் இழந்த பின்பும் தனது சிறிய மகனை வேல் கொடுத்து களத்திற்கு அனுப்பிய தாயையும்; எனது மகன் புறமுதுகிட்டோடி மடிந்திருந்தால், அவன் பால் குடித்த இந்த முலைகளை அறுத்தெறிவேன் எனச் சபதமிட்டு களம் சென்று மகனைத் தேடிக் கண்டு பெருமையுற்ற அந்தத் தாயையும் புறநானூறு எமக்குக் காட்டுகின்றது.

இவைகள் இன்று வெறும் இலக்கிய உதாரணங்களல்ல. இன்று நடைமுறையில் உள்ள சூழலும் இதுதான். மகனைப் பிரிந்த தாயும், கணவனைப் பிரிந்த மனைவியும், காதலனைக் காணத்துடிக்கும்காதலியும் எனப் பலர் சந்திப்புகளுக்கு ஏங்கித் தவிக்கின்றனர் என்பது வெள்ளிடை மலை. இந்தச் சந்திப்புக்களைக் கூட சாத்தியமற்றதாக்கி இருக்கும் இன்றைய சூழல், போராட்டம் வேகத்தோடு முனைப்புப்பெற்று இருப்பதன் வெளிப்பாடாகும். ஆனால் இச்சூழலிலும் இன்றைய எமது பெண்களின் பொதுவான மனோபாவம் என்ன? நாம், எமது குடும்பம், அதன் எதிர்காலம் என்ற வகையில் மட்டும் சிந்தித்து அந்தக் குடும்ப நலனை மையமிட்டுச் சுயநலவாத அடிப்படையில் செயற்படுகின்றனர். போராட்டம் எல்லாம் சரிதான் என்று கூறிக்கொண்டே தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுகிறவரா மட்டும் குறுக்கிக்கொண்டு வெளி உலகைப் பார்க்க மறுக்கின்றனர். அப்படிப் பார்ப்பவர்களில் பெரும்பாலானோர் பங்கேற்க மறுக்கின்றனர்.

மறுபுறத்தில் போராட்ட நடவடிக்கையில் ஈடுபடும் பெண்களை ஒரு விதமாகப் பார்க்கவும் சித்தரிக்கவும் இந்தச் சமூகம் முற்படுகின்றது. ஒரு சில இடங்களில் போராளிகளுக்கிடையில் ஏற்பட்ட தவறான நடத்தைகளும், அதன் பின்னான மோசமான செயல்களும் சிலரை வெறுப்புக்கொள்ளச் செய்வது உண்மையே. ஆனால் இத்தகைய அடாவடித்தனங்களைத் தடுக்கும் உறுதியான மனோதிடமும், தெளிவான சிந்தனையும் கொண்டு பெண்கள் அணிவகுப்பதன் மூலமே இவற்றை இல்லாதொழிக்க முடியும். சமூகத்தில் அரைப்பங்கினராக உள்ள பெண்கள் தங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்குவதன் மூலமே போராட்டத்தை முன்னெடுப்பது சாத்தியமாகும். இவ்வகையில் சிறைசென்ற தம் புதல்வர்களை மீட்கக் கோரி அணிதிரண்ட அன்னையர் ஒரு முன்னணியின் கீழ் நிகழ்த்திய ஆர்ப்பாட்டமான செயற்பாடுகளை நாடறியும்.

### இன்றைய சூழலும் பெண்கள் விடுதலைப் போராட்டமும்

இன்றைய எமது இக்கட்டான சூழ்நிலையில் தேசிய இன ரீதியான அடக்கு முறை கூர்மைப் படுத்தப்பட்டு இன விடுதலையை மையமிட்டப் போராட்டம் முன்னேறியிருக்கும் நிலையில் 'பெண் விடுதலை' சம்பந்தமான போராட்டம் எப்படியிருக்க முடியும்? எமது பெண்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சனைகளான 1. பொருளாதார ரீதியாக பிறரைச் சார்ந்து நிற்றல் 2. மதக்கட்டுப்பாடுகள் 3. பண்பாடு கலாச்சார ரீதியான கட்டுப்பாடுகள் என்பவற்றில் இருந்தும் விடுதலை பெறுவதற்குரிய முதல் நிபந்தனை '**பெண்ணினம் முழுவதையும் மீண்டும் பொதுத் தொழில் துறையில் ஈடுபடுத்துவதுதான்**'' எனக் குறிப்பிட்டார் ஏங்கல்ஸ். இந்தவகையான பொதுத் தொழில் துறைகளை நிறுவும் அதிகாரத்தைப் பெறக் கூடியதும், பெண்களினது பிரச்சனைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு நடவடிக்கையில் ஈடுபடுவதும் சாதாரணமான மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சக்திகளினாலேயே சாத்தியப்படும் என்பது தெளிவானது.

தேசிய இன விடுதலைக்கான போராட்டம் கூர்மையடைந்திருக்கும் நிலையில், பலவாறான சக்திகள் இப்போராட்டத்தை முன் எடுத்து வருகின்றன. இந்தச் சக்திகள் அனைத்தும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் இரண்டறக் கலந்து முன்னணியில் நிற்பதன் மூலம், விடுதலைப் பயணத்தைத் துரிதப் படுத்த வேண்டும் என அவாவுகின்றன. இதே வேளையில் இப்போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் சிலர் அனுபவித்த கசப்பான அனுபவங்கள் பெண்களைப் பெருமளவில் பாதிப்பதாயுள்ளதனை உணரக்கூடியதாக உள்ளது. ஆதலினால் சாதாரண மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்துப் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை அமைக்கக் கூடிய சக்திகளின் வெற்றியே பெண்களின் விடுதலையையும் நிதர்சனமாக்கும் என்பதை உணரவேண்டும். அதில்லாமல் பெண்களுக்குரிய பிரச்சினைகளை மறுதலித்து தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் கலக்கச் செய்வதோ; அல்லது தனித்து மகளிருக்கான ஒரு அமைப்பினூடாக பெண்கள் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்பதோ நடைமுறைக்கு ஒவ்வாததாகவே இருக்கும்.

எனவே இன்றைய சூழலில் தேசிய இனவிடுதலைப் போராட்டம் கூர்மையடைந்துள்ள வேளையில் முன்னணியில் இருக்கும் சக்திகளை இனம் பிரித்து சாதாரண மக்களின் உண்மையான நலன்களைப் பிரதிபலிக்கும் சரியான சக்திகளுடன் இணைந்து அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பெண் விடுதலைக்குரிய பாதையை விரைவு படுத்தலாம். அத்தகைய சக்திகளின் சீரிய செயற்பாடே ஈழப் போராட்டத்தை நிதர்சனமாக்கும்.



ஒடுக்குமுறையினால் சகிக்கமுடியாத பெண்களின் எழுச்சி மிக்க ஊர்வலம்

படிப்பகம்

www.padippakam.com



# பொதுமை

தமிழ் பேசும் மக்களின் அபிலாசையான விடுதலைக்காகப் போராடுகின்ற ஸ்தாபனங்களை-இயக்கங்களை நோக்கி பொது மக்கள் பகிரங்கமாகவே உருக்கமான வேண்டுகோள் விடுக்கின்ற நிலைகண்டு கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. அதுவும் இத்தகைய வேண்டுகோள்கள் மனிதாபிமானத்தின் பெயராலும் சமூகநீதியின் பெயராலும் விடப்படுவதனால் இலகுவில் தட்டிக் கழித்துவிட முடியாது என்றே எண்ணுகிறோம். இதுமட்டுமன்றி விடுதலைக்காகப் போராடுவதற்கெனத் தம்மை வரித்துக் கொண்டதாகக் கூறும் ஸ்தாபனங்களுக்கு எதிராகப் பொதுமக்கள் கண்டனக்குரல் எழுப்புவதையும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதையும்கூட ஆங்காங்கே அவதானிக்கமுடிகிறது.

அரசு செயற்கையாக உருவாக்கிய எரிபொருள் நெருக்கடியிலிருந்து விடுபடுவதை மையமாகக் கொண்டு தனியார் எரிபொருளை விற்பனை செய்ய எடுத்த முயற்சிகள் இனந்தெரியாத நபர்களின் செயற்பாடுகளினால் பலத்த பாதிப்புக்கு இலக்காகியது. இதன் விளைவைப் பொதுமக்கள் உடனடியாகவே உணருகின்றனர். தட்டுப்பாடான எரிபொருளினால் சாதாரண போக்குவரத்து மிக நெரிசலுக்கு உள்ளாகியுள்ளது. கட்டண விகிதங்கள் கண்டபாட்டிற்கு ஏறுவதாகவுள்ளது. தட்டிக்கேட்கவும், தடுக்கவும் யாருமற்ற நிலைமைகளின் தாற்பரியம் பொது மக்களைப் புண்படுத்துவதாக உள்ளது.

இதேபோல் பொதுசன சேவையை மையமாகக் கொண்டு செயற்பட்டுவரும் வைத்தியசாலை, உணவு விநியோகம், போக்குவரத்து, அஞ்சல்துறை, மின்விநியோகப்பகுதி போன்ற நிறுவனங்களில் அடிக்கடி ஏற்படும் அசம்பாவிதங்கள் - அனர்த்தங்களையே தோற்றுவிக்கும் என்பதைச் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் குறிப்பாக ஒவ்வொரு விடுதலைப்போராளியும் உணர வேண்டும். மக்களை நேசித்து மக்களைக் காப்பதற்காக ஆயுதம் தரித்த ஒவ்வொரு போராளியும் தமது செய்கைகளால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இது மட்டுமன்றி எமது தேசிய உற்பத்தித்துறை வளர்ச்சியடையாத இவ்வேளையில், அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவைப்படும் நுகர்ச்சிப் பொருட்களின் மீதும் நாம் கவனமாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது. செயற்கையாக உருவாக்கப்படும் தட்டுப்பாட்டின் காரணத்தால் கட்டுப்பாடற்ற விலையேற்றமும் சாதாரண மக்களின் பாவனைக்குப் பொருள்கள் கிட்டாமையும் ஏற்பட விடுதலைப் போராளிகள் காரணகர்த்தாக்களாக இருக்கக்கூடாது என்றே விரும்புகிறோம்.

ஏற்கனவே அரசின் ஒடுக்குமுறைகளாலும், இராணுவத்தின் அடாவடித்தனங்களாலும் பொருளாதார, சரீர, ஆத்மார்த்தப் பாதிப்புகளுக்கு இலக்காகித் தவிக்கின்றனர் எமது மக்கள். இதனால் விடுதலை என்ற இலட்சியப் பயணத்திற்காக இத்தகைய துன்பங்களையும், துயரங்களையும் சுமந்துகொண்டிருக்கும் எம்மவருக்கு, மேலும் மேலும் இன்னல்கள் ஏற்படுவதனைத் தவிர்க்கவும் தடுக்கவும் வேண்டிய கடமைப்பாடும் பொறுப்பும் எம்மைச் சார்கிறது. இல்லாவிட்டால் இயக்கங்களின் மீது வெறுப்பும் கசப்பும் வளர்ந்து, இலட்சியத்தின் மீதே நம்பிக்கை இழக்கச் செய்து மக்களை எதிரியிடம் சரணாகதி அடையத் தூண்டிவிடும்.

ஒன்றிணைந்து போராட வேண்டுமென்ற ஒரே குறிக்கோளில் இணைந்த இவ்வியக்கங்களும் தற்சமயம் இந்த அடிப்படையில் நடவடிக்கையை மேற்கொண்டிருக்காவிட்டாலும் அதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்குப் பதில் உருக்குலைப்பதாக இருக்கக்கூடாது.

இப்போதிருக்கும் இக்கட்டான நிலைமையில் குறைந்த பட்சம் உணவுப்பண்டங்களைத்தானும் இந்த இளைஞர்கள் திருடாது விட்டார்களேயானால் இவர்கள் 'வரலாறு படைத்தவர்களாவர்'. ஏழை எளியவர்களுக்கு அன்றுடம் கிடைக்கும் ஒருநேர உணவைத்தானும் உண்ணவிடாது தடுக்கும் இந்தக் கட்டுக்கடங்காத சக்திகள் மக்கள் போராட்டத்தை எப்படி நடத்தப் போகின்றன?

தற்சமயம் இச்சக்திகள் இத்தகைய கீழ்த்தரமான வேலைகளைத்தானும் செய்யாது 'சும்மா' இருப்பார்களேயானால் அதுவே போதும்.

இயக்கங்களிடையிலான ஐக்கியமும் பரஸ்பர புரிந்துணர்வும் இத்தகையரீதியில் மக்களின் மனோநிலை பாதிப்படையாமல் பாதுகாக்கத் துணைபுரியவேண்டும். ஐக்கியப்பட்டு நிற்கும் இயக்கங்கள் சேவையினை மையமாகக் கொண்ட, பொது ஸ்தாபனங்களைப் பாதுகாக்க - எமது மக்களுக்குச் சேவை செய்ய, பூரண ஒத்துழைப்பு நல்குமாயின் இயக்கங்களின் போக்குக் குறித்தும், ஐக்கியத்தின் நன்மை குறித்தும் மக்கள் ஆழமாகச் சிந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்படும் என எண்ணலாம். இந்த அடிப்படையில் செயலாற்ற ஈழப்புரட்சி அமைப்பு, தமிழ்ஈழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஆகியன இணைந்த கூட்டமைப்பு ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கும் என எதிர்பார்க்கலாம்.

# திம்பு பேச்சு வார்த்தை பற்றி ஈழத் தேசிய விடுதலை முன்னணி

போர் நிறுத்த மீறல்களுக்கான சரியான தெளிவான பதிலைக் கூறாமல் தட்டிக்கழிக்கிறது ஸ்ரீலங்கா அரசு என்று தனது அதிருப்தியினை ENLF தெரிவித்துள்ளது.

சிங்களவருக்கு ஊர்க்காவல் படை என்ற போர்வையில் ஆயுதங்கள் வழங்கப்படுவது குறித்து ENLF கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளது.

கடல் கண்காணிப்பு வலையம் முற்றாக நீக்கப் படவில்லை.

தமிழ் பேசும் மக்கள்வாழும் பிரதேசங்களில் சுற்றி வளைத்தல், கைது செய்தல். தேடுதல் போன்ற இராணுவச் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த முடியாதென்று பாதுகாப்பினை காரணம் காட்டி அரசு தரப்பினர் கூறுகின்றனர்.

போர் நிறுத்த உடன்படிக்கையை ஆயினும் செவ்வனே நடைமுறைப்படுத்த முடியாத இந்த ஸ்ரீலங்கா அரசினால் எப்படி தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வை முன்வைக்க முடியும்? - ENLF

ENLF இனால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்ச அடிப்படைகளில் இரண்டினை நிராகரித்துள்ள ஸ்ரீலங்கா அரசுடன் ஆகஸ்ட் 12 ம் திகதி இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நிகழுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ENLF ஆனது தனது நிலைப்பாட்டினை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டி 16-07-85 அன்று சென்னையில் கூட்டப்பட்டது முதலில் திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ENLF பிரதிநிகளின் கருத்துக்களையும் தகவல்களையும் ஆராய்ந்த பின்னர் ENLF தனது கருத்தினை மக்கள் முன் வைத்துள்ளது, விபரம் வருமாறு.

ENLF பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா அரசினது போர் நிறுத்த மீறல்கள் பற்றிய பல சந்தேகங்களை வினவியதற்கு தட்டிக்கழிக்கும் முகமாக அரசு தரப்பினர் பதிலளித்தனர் என அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. அதாவது, கடல்கண்காணிப்பு வலையம் முற்றாக நீக்கப் படாமை குறித்த வினாவிற்கு, மூன்று கிலோ மீற்றர் வரையில் மீன்பிடிக்கச் செல்லலாம் என்றும் பாதுகாப்பு காரணங்களால் முற்றாக நீக்கப் படாதுள்ளதென்றும் அரசதரப்பில் கூறப்பட்டுள்ளது. இதேபோலவே, சுற்றி வளைத்தல் - கைது செய்தல் - தேடுதல் போன்ற இராணுவச் செயல்பாடுகளையும் உடனடியாக கைவிட முடியாதென்றும் பாதுகாப்பு கருதி இவற்றை நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளதென்றும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒத்துக் கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின்படி மேற்படியாக ஸ்ரீலங்கா அரசு மீறுகிறது என்று சுட்டிக் காட்டிய ENLF, போர் நிறுத்த உடன்படிக்கைகளை அரசு மனப்பூர்வமாக அமுல்படுத்துமா? என்றசந்தேகத்தையும் வெளியிட்டுள்ளது.

மேலும், கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் சிங்களவர்களுக்கு ஊர்க்காவல் படையென்ற போர்வையில் ஆயுதம் வழங்கும் ஸ்ரீலங்கா அரசினது செயல்பாடு குறித்தும், மீண்டும் பொலீஸ் நிலையங்களை திறக்க எத்தனிப்பது குறித்தும், ENLF சார்பில் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவில் அரசு ஆயுதக்கொள்வனவினை மேற்கொள்வது பற்றி ENLF பிரதிநிதிகள் கேட்டதற்கு மீண்டும் பாதுகாப்பினையே காரணமாக கூறியுள்ளது ஸ்ரீலங்கா அரசு பிரதிநிதித்துவக்குழு.

இவற்றிலிருந்து போர் நிறுத்த உடன்படிக்கையைக் கூட செவ்வனே நடைமுறைப்படுத்த முடியாத ஸ்ரீலங்கா அரசினால் எப்படி தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வை முன் வைக்கமுடியும்? என்ற சந்தேகம் E.N.L.F வட்டாரங்களில் பலமாக எழுந்துள்ளது.

பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ENLF முன்வைத்த நான்கு அம்ச அடிப்படைகளான 1) தமிழ் மக்கள் தனித் தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்ளல். 2) மக்களிடம் இருந்து பறிக்க முடியாத சுயநிர்ணய உரிமையான சேர்ந்து வாழ்வதா? பிரிந்து போவதா என்ற உரிமையை ஏற்றுக் கொள்ளல்.
3) தமிழ் பேசும் மக்களில் பிரிக்க முடியாத ஒரு அங்கமான மலையக மக்களின் குடியுரிமை உட்பட இதர அடிப்படையுரிமைகளையும் நிலை நிறுத்தல்.
4) இம் மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கான வாழ் நில (Home Land) உரிமை உண்டென்பதை ஏற்றுக்கொள்ளல்.

மேற் கூறப்பட்ட நான்கில் முதல் இரண்டு அம்சங்களை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்து விட்டுள்ளது. எனவே தொடர இருக்கும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் ENLF கலந்து கொள்ளுமா? என்ற சந்தேகம் ENLF வட்டாரங்களில் பலமாக எழுந்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசினது நடவடிக்கை தொடர்பான தமது அதிருப்திகளை இந்திய அரசிற்கு தெளிவுப் படுத்த ஆவன செய்யப்படும் என ENLF வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

இப்பேச்சு வார்த்தையில் தமிழர் பிரதிநிதித்துவக் குழுவில் ஆயுதம் தாங்கிய பிரதான ஐந்து இயக்கங்களும் கலந்து கொண்டமையும் இலங்கைக்கு வெளியில் பூட்டானில் இப்பேச்சுவார்த்தை நடை பெற்றமையும், உலகஅரங்கில் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளதென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# கொழும்பில் வெடிகுண்டு

* கொழும்பில் வெடிகுண்டு: சென்ற 11-07-85 அன்று இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவைக் கொல்லும் சதி முயற்சி என்று கூறி கொழும்பில் வெடிக்குண்டு பிடிக்கப்பட்டதாகவும், 127Kg கிலிக்னேற் (gelignite) வெடி மருந்து வைக்கப்பட்ட இக்குண்டு வெடித்திருந்தால் 100 மீட்டர் சுற்றுடல் பலத்த சேதத்துக்குள்ளாகி இருக்கும் என அரச பிரச்சாரப் பீரங்கிகள் முழங்கின. இதன் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்கள் ஈழப்புரட்சி அமைப்பைச்சார்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது சென்னையில் இது அரசின் பழிசுமத்தும் முயற்சியென குறிப்பிட்டு ஈரோஸ் சார்பாக தெளிவானமறுப்பு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் எந்தக்காலத்திலும் தனிநபர் பயங்கரவாதத்தில் எமக்கு நம்பிக்கையிருந்ததில்லை என்றும் தனிநபர்களைக் கொல்வதன்மூலம் மக்களின் பிரச்சனைகளை தீர்வுக்குக்கொண்டு வர முடியாதென்றும் ஈரோஸ் (EROS) தனது மறுப்பில் தெரிவித்தது.

# போர் நிறுத்தமா? போருக்கான ஆயத்தமா??

மாணவர் இளைஞர் பொதுமன்றம் (GUYS) ''போர் நிறுத்தம் போராட்டமுடிவல்ல'' என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டது. அதன் பத்திரிகையான ''நாங்கள்'' இதழ் 5 ல் ஆசிரியர் தலையங்கத்தில் தனது கருத்தை முன் வைத்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இப்பகுதி பலரையும் கவர்ந்துள்ளது.



தழும்புகளைத் தடவிப் பார்த்துக் கொண்டால்- அவை வலிப்பதில்லை. மாறாக தழும்பின் வரலாறுகளை நீங்கள் மறந்துவிட முடியாது. கற்பு பறிக்கப்பட்ட எத்தனையோ சகோதரிகளின் உள்ளத்துயர் இன்னும் ஆறவில்லை. பெற்றோரை இராணுவத்தின் வெறியாட்டத்திற்கு பலி கொடுத்து அனாதைகளாக வெறித்த விழிகளில் வற்றாது நீர் சிந்தும் சிறார்கள், எரிந்துபோன தம் வீட்டின் சாம்பல் மேடுகளில் இருந்து பெருமூச்சு விடும் மக்கள்; இராணுவ முகாம்களில் தொடர்ச்சியான சித்திரவதைக்குட்படும் தம் மைந்தர்களை நினைந்துருகும் அன்னையர்கள்; அகதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களில் போதிய உணவோ உறங்க இடமோ இன்றி தொற்றுநோயோடும் பசி, பட்டினியோடும் போராடும் ஆயிரக்கணக்கான எம்மக்கள்; இவை எல்லாவற்றையும் மறந்து ஈழவரின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி முடமாக்க நினைக்கும் கோமாளித்தனமான ஜே.ஆர். அரசின் கபடத்தனமான போர் நிறுத்த உடன்படிக்கை என்பது எமது பறிக்கப்பட்ட உரிமைகளை ஆட்சியாளர்கள் வழங்கப் போவதற்கு அறிகுறி என எமது மக்கள் நினைப்பின் அவர்களுக்காக நாம் பரிதாபப்படுகின்றோம்.

கபடத்தனமான போர் நிறுத்தம் எங்கள் மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து நெருக்கடி நிலையில் இருந்து விடுபட்டோம் என நினைக்க வைப்பின் தமது சுகதுக்கங்களை உதறி இளமையிலேயே இம்மண்ணிற்காக உயிர் நீத்த அப் போராளிகளின் உயிர்த்தியாகங்கள் அர்த்தமற்றவையாகிப் போய் விடாதோ?

**போர் நிறுத்தம் போராட்ட முடிவல்ல**